தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 130

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை : ஐப்பசி 28வ வெள்ளி (13—11—53): ★ ★ ★ வெளியூர் : ஐப்பசி 29வ சனி (14—11—53)

சேவையால் சிறந்தவர்கள் பணம் திரட்டவும், பதவிக்கும் போயினரே!

கிறித்துவப் பாதிரிகளைப் பார்த்த பிறகும் புத்திவரக் காணோமே!

பாரத சேவா சமாஜமும் கோரிய பலனை அளிக்கவில்லையே!

மக்கள் போக்குக் கண்டு யூனியன் சர்க்கார் அதிகாரி முகாரி!

லோர்டகா (ராஞ்சி), நவ. 12 -

"அந்தக் காலத்தில் சிறப்புற்றிருந்த சமூக ஊழியர்களில் சிலர் சட்டசபை உறுப்பினர்களாகவும், சர்க்கார் அலுவலர்களாகவும், வேறு துறையை மேற்கொண்டவர்களாகவும் மாறி விட்டார்கள். இந்த நிலையில், அவர்கள் விட்டுச் சென்ற இடத்தை நிரப்பி சமூக ஊழியத்தை மேற்கொள்ள புதியவர்கள் முன்வரவில்லை."

"தங்களுக்குள்ள ஆழ்ந்த சமயப் பற்றுதலின் காரணமாக, கிறித்துவ மதத்தைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு, வெளிநாட்டு கிறித்துவ சமயப் பிரசாரகர்கள், வெகு தொலைவில்—காட்டிலும், குன்றுகளிலும்—வசிக்கும் காட்டு மக்களுக்கு சேவை செய்யும் ஆர்வத்தோடு தங்களை ஒப்படைத்துக்கொண்டு இருப்பதை, நாம் பெருத்த அவமானத்தோடு ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்."

இவ்வாறு, மத்திய சர்க்காரின், பின்னணி மக்களின் கமிஷனராக உள்ள எல். எம். சிரிகண்ட் என்பவர், லோர்டகா (ராஞ்சி)வில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது :

'அரசியல் விடுதலைபெற்றுவிட்டபிறகு, எந்தவிதமான சமூக சேவையிலும் தாங்கள் ஈடுபடுவதற்கான அவசியமும் இல்லை — தேவையும் கிடையாது என்றும், எல்லா காரியங்களையும் சர்க்கார் அறையினரே மேற்கொள்ள வேண்டும் என்றும துரதிஷ்டவசமாக மக்கள் நினைக்கத் தொடங்கி விட்டார்கள். இதன் பலனாக, கடந்த முப்பது ஆண்டுகளாகக் காந்திய காலத்தில் வெளிப்படையாகத் தெரிந்துவந்த சமூக ஊழிய ஆர்வத்தை இழந்து, செயலாற்றுந் துறையில சோம்பியும் கிடக்கிறார்கள்."

"ஹஷாய், காசி குன்றுகளிலும், நாகர்கள் வசிக்குமிடங்களிலும், பீகார்—மத்தியப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும், எந்த ஒரு சர்க்காரின் பண உதவியையும் கருதாமல், பல கல்வி நிலையங்களையும், மருத்துவ நிலையங்களையும் நிறுவி அவர்கள் புரிந்துவரும் பணியையும், தன்னலமறுப்பையும் நமக்கு ஒரு நல்ல முன்மாதிரியாகக் காட்டி இருக்கிறார்கள்."

"இந்தியாவில் உள்ள பலப்பல காட்டு மக்களின், பழக்க வழக்கங்களையும், கிராமியப் பாட்டுகளையும், நாட்டியங்களையும், நுணுகி நுணுகி ஆராய்ந்து, இனநூல் கற்ற வெளிநாட்டினர், சிறு சிறு நூல்களாக்கி உள்ளனர். இத்துறையிலும் நாம் மிகமிகப் பின்னணியில் கிடக்கிறோம்."

"காந்தி காலத்தில் இருந்ததுபோல் அல்லாது இப்பொழுது நாம், கமமிடை பணியாற்றுவதற்கான சமூக ஊழியர்களுக்கு பெரிதும் தட்டு ஏற்பட்டு இருக்கிறது. சுயராஜ்யம் பெறுவதற்கு முன்பு, குறைந்த ஊழியம் பெற்றுக்கொண்டு, சேவைக்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்டு, சாகும் வரையில் சமூக சேவையை மேற்கொள்ள தம்மிச்சையாக முன் வந்தனர்.

இன்று அந்த உணர்வு உறங்கிப் போய் கிடக்கிறது. சில நாட்களுக்குமுன் துவக்கப்பட்டுள்ள புதிய பாரத சேவா சமாஜம்கூட, முழு நேர சமூக ஊழியர்களைப் பெறுவதில் உள்ள சிக்கலால், எதிர் பார்த்ததற்கேற்ற பலன் தருவதாக இல்லை.

காட்டு மக்களிடம் சமூக ஊழியம் செய்வதென்பது இலகுவான காரியமல்ல.

தன்னலமறுப்புள்ள சமூக ஊழியர்களை ஆக்குவதற்கான ஆற்றல் படைத்திருந்த மகாத்மா காந்தி அல்லது தக்கர் பாபா போன்றவர்கள், துரதிர்ஷ்டவசமாக இன்று நம்முடன் இல்லை. இருந்தாலும், அத்தகைய ஊழியர்களை உருவாக்க நாம் முயற்சிக்க வேண்டும்"

1953 ஜூலை 31-ந் தேதியுடன் முடிந்த ஐந்து மாத காலத்தில், உபரிலேடோர்ஸ் சாமான்கள் விற்பனையின் மூலம் இந்திய சர்க்காருக்கு 4.17 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது.

மொழிவழி மாகாண எல்லைக் குழு முளைக்கிறது!

ஜெயப்பிரகாஷுக்கு ஒரு இடம்

இந்திய சர்க்கார் நீண்ட காலமாகக் கூறிவரும் உயர் தனி எல்லைக் கமிஷனில் தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயணன், உத்திரபிரதேச பிரதமர் கோவிந்தவல்லபந்த் ஆகியோர் இடம் பெறுவரென்று தெரிகிறது.

மொழிவழி மாகாணப் பிரிவினை சம்பந்தமாக இருந்துவரும் தகராறுகளையும், சிக்கல்களையும் தீர்ப்பதற்கென்றே இக்கமிஷன் நியமிக்கப்பெறுகிறதென இந்திய சர்க்கார் கூறிவந்துள்ளனர். காங்கிரஸ் காரியக் கமிட்டி இதனை தனது அடுத்தக் கூட்டத்தில் ஆய்ந்து முடிவு கட்டுமென கூறப்படுகிறது.

தகராறுக்கு இடமில்லாத வகையிலான அரசியல் தலைவர்களை இக்கமிஷனில் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் கருதப்படுகிறதாம்.

நீதி, நியாயத் துறையில் எவ்வளவுதான் வல்லுநராக இருப்பினும், தனிப்பட்ட ஒரு நபரிடம் மாகாணங்களின் எல்லை கோடுகளை வகுக்கும் பொறுப்பை ஒப்படைப்பது நல்லதாகாதென்றும் இப்போது உணரப்படுகிறதாம்.

வேலையில்லாமைச் சுழலில் சிக்கிய தென்னாடு

சென்சஸ் கமிஷனர் படப் பிடிப்பு

புதுடில்லி, நவ. 13—

1951-ம் ஆண்டில் எடுக்கப்பெற்ற மக்கள் தொகைக் கணக்கை (சென்சஸ்) ஒட்டி சென்சஸ் கமிஷனர் தயாரித்து சர்க்காருக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் இந்திய உபகண்டம் வறுமைக்காடாக இருப்பதும், தென்னாடு வேலையில்லாத் திண்டாட்டத்தில் மூழ்கித் தவிப்பதும் எடுத்துக்காட்டப்படுகிறது. இந்தியாவின் வேறு எந்தப் பகுதியைக் காட்டிலும் தென்னிந்தியப் பகுதியே வேலையில்லாமை என்கிற [illegible]யில் சிக்கி அல்லல்படுகிறது என அவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

இந்தியா[illegible] வேலை செய்யும் ஒரு நபர் தன[illegible]பாத்தியத்தைக் கொண்டு [illegible] வேலையின்றி இருக்கும் இரு (குடும்ப) நபர்களையும் பார்க்க வேண்டிய அவசியத்திலிருக்கிறார் என்று அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் காணப்படாத இந்த அவல நிலை, இந்தியாவில் மட்டும் காணப்படுவதற்குக் காரணம், அந்நாடுகளைவிட இந்தியாவில், குழந்தைகள் இளைஞர்கள் ஆகியோரின் சதவிகித எண்ணிக்கை கூடுதலானதுதான் என்று அவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

வெறும் விவசாயத்தை மட்டும் இந்தியா பெரும் அளவில் நம்பியிருப்பதும், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் தொழிற்சாலைகள், வியாபாரங்கள் ஆகியவற்றில் பெரிதும் கவனம் செலுத்துவதுமே இவ்வேறுபாடுகளுக்கெல்லாம் மற்றொரு முக்[illegible] காரணமெனக் குறிப்பிடு[illegible], அறிக்கை!

கண்மூடித்தனம் வே[illegible]டாமெனக் காங்கிரசாருக்கு அறிவுரை[illegible]

மக்களாட்சியும் 'புருட் மெஜாரிட்டியும்!'—நேருவின் சப்பைக்கட்டு!

"என்னைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றுகிறீர்கள்; ஒவ்வொரு பிரச்னையையும், நல்லது கெட்டது எது வென ஆய்ந்து முடிவுகட்டுங்கள்,"

என்று, இந்தியப் பிரதமர் நேரு, ஜலந்தரில் 10-ந் தேதியன்று நடந்த காங்கிரஸ் தொண்டர்கள் கூட்டமொன்றில் குறிப்பிட்டார்.

"காங்கிரஸ் எவ்வளவோ தவறுகள் இழைத்திருக்கலாம்; வாக்குறுதிகளை மறந்திருக்கலாம்; எனினும், காங்கிரஸ் தொடர்ந்து ஆட்சி செய்ய வேண்டியது அவசியம்; ஏனெனில், அதுவே நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த இயக்கம்," என்று நேரு மேலும் குறிப்பிட்டார்.

நேரு மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"மக்களாட்சி முறை என்பது, பெருவாரியான மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் ஆட்சிதான் என்றாலும், அத்தகைய மெஜாரிட்டி (மக்கள் ஆட்சி) முறை மிருகத்தனமான (புருட்) மெஜாரிட்டியாக இருப்பின், நான் அத்தகைய மெஜாரிட்டிக்கு தலை சாய்ப்பதை விட ஒதுங்கியே நிற்பேன்,"

மாணவர்கள் அரசியலில் கலந்து கொள்வதாயிருந்தால், நேரிய முறையில் கலந்து கொள்ளுதல் வேண்டுமென்றும், அவர்கட்குப் பொறுப்புகள் மிகப் பல வென்றும், எனவே, அவர்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளுதல் கூடாதென்றும் நேரு மேலும் தெரிவித்தார்.

'தமிழ் மொழி ஆட்சி மொழி ஆக வேண்டும்'

தோழர் கஜபதி முயற்சி

சென்னை, நவ. 12—

சென்னை மாநிலத்தில் தமிழே ஆட்சி மொழியாக வேண்டுமென்று சென்னை மேல் சபை உறுப்பினர் ஏ. கஜபதி நாயகர் ஒரு மசோதா கொணர்கிறார்.

இம் மசோதாவில், குறிப்பிட்டுள்ளதாவது :

"தமிழை ஆட்சி மொழியாக்கும் இச் சட்டம் மாநிலம் முழுவதிலும் அமுல் நடத்தப்பட வேண்டும். தமிழ் மொழி தவிர, வேறு மொழிகளை பெரும்பாலான மக்களால் பேசப்படும் மாவட்டங்களுக்கு விதிவிலக்கு உண்டு. இந்தச் சட்டம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் அமுலுக்கு வரவேண்டும்."

தலைவர் சிறையில்!
இன்று
74-வது நாள்

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 13—11—1953 வெள்ளி

அதிகார மோகம்!

எதிர்க் கட்சியினர் எதைப்பற்றிப் பேசினபோதிலும், 'எல்லாம் இந்திய அரசியல் சட்டத்தில் இருக்கிறது; பாருங்கள்,' என்று பீத்திக்கொள்ளும் போக்கை காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் சிலகாலமாகவே மேற்கொண்டு வருகிறார்கள். அள்ளித் தெளித்த அவசர கோலமான அமைச்சர் ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்திற்குக்கூட, இந்திய அரசியல் சட்டந்தான் ஆதாரம் காட்டுவதற்கு அருந்துணையாக இருந்தது. அதாவது, 'இன்னும் பத்து ஆண்டுகளுக்குள்ளாக வயதுவந்த அனைவருக்கும் கல்வி போதித்தாக வேண்டும்' என்று அரசியல் திட்டத்தில் கூறப்பட்டுள்ள 'நல்நோக்கு இயல்' பிரிவுப்படிதான், எல்லா சிறார்களுக்கும் குறைந்த செலவில் கல்வி தர புதிய திட்டத்தைப் புகுத்தினதாக ஆச்சாரியார் பொக்கம் பேசிக்கொண்டார். எழுத்துக்கு எழுத்து, உணர்ச்சிக்கு உணர்ச்சி அப்படியே அரசியல் திட்டத்தை அனுசரித்துக் கொண்டுதான் காங்கிரஸ் சர்க்கார் நடைபெற்று வருவதாக, காங்கிரஸ் அமைச்சர்கள் சொல்லிக்கொள்ளுவது எல்லாம் வெறுஞ் சொல்லலங்காரம்தான் என்பதை உலகம் அறியும்.

கிராமப் பஞ்சாயத்துகள் முழு உரிமை பெற்று, தனித்து இயங்கும் தன்னாட்சி மன்றங்களாக இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், இந்திய அரசியல் சட்டம், 'நல் நோக்கு இயல்' பிரிவில் கூறியிருக்கிறது. அரசியல் சட்டத்தில் 'நல் நோக்கு இயல்' பிரிவில் கூறப்பட்டுள்ள எல்லா இனங்களையும் கட்டாயமாக சட்டப்படி நிறைவேற்றியே தீர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கவில்லை. எந்தத் துறையிலாவது சட்டம் இயற்றப்படுகிறதாக இருந்தால், அந்த 'நல் நோக்கு இயல்' சுட்டிக்காட்டுவதற்கொத்த சட்டங்களைச் செய்ய [illegible]டும் என்ற சிபாரிசைத்தான் அது அளிக்கிறது. [illegible] சர்க்கார் இயற்றும் சட்டங்கள் இந்த நல்நோ[illegible]யலுக்கு ஒத்து இருக்கிறதா, முரண்பட்டு இருக்கிற[illegible] முடிவு காணும் பொறுப்பு சட்ட[illegible]க்கு கிடையாது. எனவே, நல் நோக்கு இயல் [illegible] அனைத்தும் வெறும் அறநெறி சாரமே யல்லாது [illegible]மில்லை.

மக்களாட்சி முறை[illegible] பாசிச முறையில் ஆட்சி நடத்துவதா[illegible], சர்வாதிகாரப் போக்கில் ஆட்சி நடத்திவருகி[illegible] காங்கிரஸ் கட்சியினர், உலகக் கண்களில் [illegible] அறநெறி சாரத்தை அரசியல் [illegible]ப் பட்டாகச் சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள் அதன்படிதான் தாங்கள் கண்டிப்பாக ஆட்சிபுரிந்தாக வேண்டும் என்ற நல்லெண்ணமும் அக்கறையும் இருக்குமானால், அந்த நல் நோக்கு இயலையும் சட்டப்படி மேற்கொண்டு ஆகவேண்டும் என்ற முடிவை, அரசியல் சட்டத்தில் ஏற்படுத்தி இருப்பார்கள். காங்கிரஸ் கட்சியினரின் ஏகபோகத்துக்கு மட்டுமே உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தில் வேண்டுமென்றேதான், இதை சட்டத்திற்குட்பட்டதாக ஆக்காமல் விட்டுவிட்டார்கள். எனவே, இந்த 'நல் நோக்கு இயல்' காங்கிரஸ் கட்சியினரின் வெறும் கண்துடைப்பு வேலை என்று சொல்வது எந்த வகையில் தவறுடையதாகும் என்று கேட்கிறோம்?

கிராமப் பஞ்சாயத்துகள் தனித்துத் தன்னாட்சி மன்றங்களாக விளங்க வேண்டும் என்ற கோட்பாட்டைக் கொஞ்சம் கவனிப்போம். இத்துறையில் பெரிய சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அதன்படி தேர்தலும் நடைபெற்று, பெரும்பாலான புதிய பஞ்சாயத்து மன்றங்களும் இயங்கிவருகின்றன. இந்த லட்சணத்தில், முன்னாள் நீதிக் கட்சியால் தொலைத்துக் கட்டப்பட்ட தாலுக்கா ஆட்சி மன்றங்களை உருவாக்கப்போவதாகவும், இதற்காக மாவட்ட ஆட்சி மன்றங்களை ஒழித்துக்கட்டப்போவதாகவும், மாவட்டக் கழகங்கள் செய்துவந்த பணியைப் புரிய, புதிதாக ஆலோசனைக் குழுவுகளை நியமனம் செய்யப்போவதாகவும், இத்துறை அமைச்சரான திருமங்கலத்தார் தினம் தினம் சொல்லிவருகிறார்.

தாலுக்கா ஆட்சி மன்றங்கள் பெரும்பாலும், கிராமத் தன்னாட்சி மன்றங்களின் உரிமைகளில் குறுக்கிடத்தான் போகின்றன. ஏற்கனவே அனுபவத்தில் கண்ட உண்மை இது. இதனால்தான் தாலுக்கா ஆட்சி மன்றங்களை நீதிக்கட்சி ஒழித்துக்கட்டியது.

மாவட்ட ஆட்சி மன்றங்களை ஒழித்துவிட்ட, அதன் பணியை, ஒரு சர்க்காரால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினிடம் ஒப்படைப்பது என்பது மக்களாட்சிமுறைக்கு நேர்மாறானதேயாகும். இந்தப் போக்கு அனைத்தும், காங்கிரஸ் கட்சியினரிடமே ஆளும் அதிகாரம் என்றென்றும் சிக்கிக்கிடக்க வேண்டும் என்ற நச்சுக் கொள்கையின் விளைவேயாகும்

மாவட்டக் கழகங்களை ஒழித்து விடுவதும், ஒழிந்துபோன தாலுக்கா ஆட்சி மன்றங்களை மீண்டும் உயிர்ப்பிக்க இத்துறை அமைச்சர் முன்வருவதும், கிராமப் பகுதியில் வேகமாகச் சரிந்துவரும் காங்கிரஸ் செல்வாக்கைக் கொஞ்சகாலத்திற்காவது நிறுத்தி வைக்கலாம் என்ற அவருக்குள்ள அதிகார மோகம்தான், இந்த நடவடிக்கைக்குக் காரணம். ஆரம்பத்தில் வேண்டுமானால், இது, அமைச்சரின் நினைப்பை நிறைவேற்றுவதாக இருக்கலாம். ஆனால் காலப்போக்கில், தாலுக்கா ஆட்சி மன்றங்களும் காங்கிரஸ் ஆட்சியினரின் எதிர்ப்பு முனைகளாக மாறிவிடும் என்பதில் எள்ளத்தனை ஐயமும் எவருக்கும் தேவை இல்லை. வரலாறு இந்த உண்மையைத்தான் போதிக்கிறது. அதிகாரத்தை உருசி பார்த்தவர்களின் போக்கே இப்படித்தான், எந்த நாட்டிலும் இதுவரை இருந்து வந்திருக்கிறது. எனவே, காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், தங்களுடைய செயல்களுக்கெல்லாம் அதே அதிகார மோகத்தை அளவுகோலாகக் கொள்வதில் ஆச்சரியமொன்றுமில்லை.

பயிற்சி பெறாத படித்தவர்களை ஆசிரியர்களாக்கும் யோசனைக்கு எதிர்ப்பு!

இத்துறையில் உ. பி. சர்க்கார் பெற்ற முழுத் தோல்வி

ஆச்சாரியார் திட்டப் பரிசீலனையும் ஜனவரியில்தான்

ஆசிரியர் போதனை பயிற்சி பெறாத, உயர்நிலைக் கல்வி பெற்றவர்களை, கிராமப் பள்ளிகளின் ஆசிரியர்களாகப் பணிபுரிவதற்கு 'ஆசிரியர் படை' திரட்டுவது என்ற ஐதராபாத் சர்க்காரின யோசனையை மத்திய சர்க்காரின் கல்வி ஆய்வுக் குழு புறக்கணித்துவிட்டது.

புதுடெல்லி, நவ 12—
ஆய்வுக் குழுவின் உறுப்பினர்கள், இந்த யோசனையைப் பலமாக எதிர்த்தார்கள்.

உத்திரப் பிரதேசத்தில் புகுத்தப்பட்ட இம்முறை, கோரிய பலனைக் கொடுக்கத் தவறி விட்டதென்று எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டது.

பரீட்சையில் தேறுகிற மாணவர்களுக்கு, கட்டாயமாக ஓராண்டு ஏதாவது சமூக சேவையில் ஈடுபட வேண்டும் என்ற நிபந்தனையின்மீதே மாணவர்களுக்குத் தேர்வு அளிக்கப்பட்டதாகவும், இதற்காகவே பைசாபாத் நகரில் ஒரு பயிற்சிக் கூடம் துவக்கப்பட்டு நடத்தப்பட்டதாகவும், இந்த முறை முழுத் தோல்வியில் முடிந்துவிடவே 1952 உத்திர பிரதேச சர்க்கார் இந்த ஏற்பாட்டை அறவே கைவிட்டு விட்டதாகவும், விளக்கிக் கூறப்பட்டது.

சென்னை சர்க்காரின் புதிய கல்வித் திட்டத்தை, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுவதாக இருந்ததும், ஜனவரி மாதத்திற்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. இன்னமும் நிபுணர் குழுவின் அறிக்கை கிடைக்காததே, இந்தத் தள்ளிவைப்புக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

சணல் மார்க்கெட்டுகளைக் கைப்பற்றும் ஆற்றல்!

1954-ம் ஆண்டின் மத்தியில் பாகிஸ்தான் சணல் மில்கள், ஆண்டு ஒன்றுக்கு 1,85 000 டன் சணலை உற்பத்தி செய்யும் என்றும், இதர நாடுகளின் சணல் மார்க்கெட்டுகளைக் கைப்பற்ற, இந்தியா, மற்றும் சணல் உற்பத்தி நாடுகளுடன் பாகிஸ்தான் போட்டியிடும் என்று நம்பப்படுகிறது.

திரு. கொச்சி தேர்தல் பிரசாரத்திற்கு பம்பாய் சரக்கு இறக்குமதி

காங்கிரசின் கையாலாகாத்தனத்தை ஈடுசெய்ய எஸ். கே. பட்டீல் வருகிறார்

பம்பாய், நவ. 12—
சமீபத்தில் நடக்க இருக்கும் திருவாங்கூர்— கொச்சி சட்ட சபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியினருக்கு முழு வெற்றியையும் வாங்கித் தர, பம்பாய் காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான எஸ். கே. பட்டீல் அவர்களை, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான பண்டிதர் நேரு நியமித்து [illegible]க்கிறார்.

பிரசாரத்தில் ஈடுபடவும், பிரசார முறைகளை வகுக்கவும், [illegible]க்காளர்களை மயக்கிக் காங்கிரசுக்கே வாக்களிக்கும் [illegible] செய்யவும் ஆற்றல் படைத்தவராம், பட்டீல் அவர்கள்! திரு. கொச்சி காங்கிரஸ் கட்சியினர் கையாலாகாத்தனத்துக்கு இது ஒரு நல்ல அத்தாட்சிப் பத்திரமாகும்!

செயற்கை அரிசி உற்பத்தி

ஜப்பானில் முயற்சி

டோக்கியோ, நவ. 11—
ஜப்பானில் கோதுமை மாவு, கொழுஞ்சிய அரிசி, ஸ்டார்ச் இவைகளைக் கொண்டு செயற்கை அரிசி தயாரிக்கப்பட்டு வருகிறது.

இச்செயற்கை அரிசியை, மாதத்தில், 8000 டன் உற்பத்தி செய்வதை அடுத்த ஆண்டிற்குள் மாதம் 15,500 டன்களாக அதிகரிக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டில், அசல் அரிசி உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது கள்ள மார்க்கெட்டில் அசல் விலைக்கு மும்மடங்காக அரிசி விற்கப்படுகிறது

நமது அனுதாபம்

தலைவர் சவுந்திரபாண்டியனார் நம்மை விட்டுப் பிரிந்து இன்னும் ஓராண்டுகூடப் பூர்த்தியாகவில்லை. இதற்குள்ளாக அவருடைய இல்லக்கிழத்தியார் இறந்தார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கிறது.

கணவன் இறந்துவிட்டபொழுதே அம்மையாரின் கருத்தும் அழிந்துவிட்டது என்றபோதிலும், இன்னும் சிலகாலமாவது உயிரோடு இருந்து, பெற்றெடுத்த மக்களைக் கண்காணித்து வரவேண்டிய என்றுதான் எல்லோரும் விழைவர்.

இருந்தாலும், அம்மையார் இயற்கை எய்திவிட்டார்கள். அவர்களுடைய பிரிவு, குறிப்பாக அவருடைய வயிற்றில் பிறந்தவர்களுக்கு ஆறாத் துயரத்தைத்தான் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, நாமும் அவர்கள் துககத்தில் பங்கு கொண்டு, நமது அனுதாபத்தையும் அவர்களுக்கு அளிக்கிறோம்.

லக்னோ பல்கலைக் கழகத் துணைவேந்தரின் இக்கம்!

14 மாணவர்களின் வெளியேற்ற உத்தரவு ரத்து

லக்னோ, நவ. 12 —
சென்ற சில நாட்களாக உத்திரப் பிரதேசத்தில், லக்னோ, அலகாபாத் முதலிய இடங்களில் நடைபெற்ற மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக, லக்னோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 14 மாணவர்களை வெளியேறி விடும்படி துணைவேந்தர் ஏற்கனவே உத்திரவிட்டிருந்தார். அந்த உத்திரவை அவர் வாபஸ்பெற்றுக் கொண்டு விட்டார். இந்த மாணவர்களில் 5 பேர் தடுப்புக் காவல் சட்டப்படி மாநில சர்க்காரால் சிறையில் வைக்கப் பட்டுள்ளனர்.

தெரிந்து கொள்ளுங்கள்

புதுடில்லி, நவ. 10—

1. இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், 284.48 கோடி பெறுமானமுள்ள பொருள்களை இந்தியா இறக்குமதி செய்திருக்கிறது
2. சமுதாய அபிவிருத்தித் திட்டம, தேசிய விஸ்தரிப்பு வேலைத் திட்டம் ஆகியவற்றின் மூலம் தற்போது 44,000 கிராமங்கள் பயன்பெற்று வருகின்றன.
3. 1953 செப்டம்பர் 1-ந் தேதியுடன் முடிந்த ஐந்து ஆண்டு காலத்தில், நிலக்கரிச் சுரங்கங்கள் பிராவிடன்ட் நிதி திட்டத்திற்குச் சந்தா செலுத்தியுள்ள நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்கு, மொத்தம் 9.93 கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது.
4. நடப்பு நிதி ஆண்டில், முதல் ஆறு மாதங்களில் வருமான வரி வகையில் மொத்தம் 58.18 கோடி ரூபாய் வசூலாகியுள்ளது.

பாரசீகத் தலைநகரில் ஆர்ப்பாட்டம்

துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் பலி

டெஹ்ரான், நவ. 12— பாரசீகத் தலைநகரான டெஹ்ரானில், முன்னாள் பிரதமர் முசாதிக்கிற்கு ஆதரவாகக் கிளர்ச்சி செய்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இன்று துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. இதன் விளைவாக இருவர் கொல்லப்பட்டனர்; பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதமர் முசாதிக் இராணுவக் கோர்ட்டில் விசாரிக்கப்படுகையில், முசாதிக்கின் ஆதரவாளர்கள் முக்கிய தெருக்களில் கூடி, 'முசாதிக் வாழ்க' என்று முழக்கமிட்டனர்.

முசாதிக்கிற்கு ஆதரவாக டெஹ்ரானின் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டன. நகரில் பலத்த போலீஸ் பாதுகாப்பு வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேமிப்புத் திட்டம்

சென்னை, நவ. 12— தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனின் சென்னை பிரதேச 'அட்ஹாக்' கழகத்தின் அவக்கக் கூட்டத்தில் ஆச்சாரியார் இன்று காலை பேசினார். அவர் பேசுகையில், கூறியதாவது:

"அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் அமலாக்கப்பட்டு விட்டால் இனி முதலாளிகள் ஏதும் செய்ய வேண்டியதில்லை என நினைத்து விடக் கூடாது. தனிப்பட்ட முறையில் தொழிலாளர்களுக்கு முதலாளிகள் அன்பளிப்பு தர வேண்டும்," என்றார்.

'அட்ஹாக்' கமிட்டியைத் துவக்கி வைத்த தொழிலாளர் மந்திரி கிரி பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இன்ஷ்யூரன்ஸ் செய்துள்ள தொழிலாளர்களுக்கு வைத்திய வசதி செய்ய வேண்டிய பொறுப்பு மாநில அரசைப் பொறுத்தது," என்றார்.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

123-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

122-வது நாள்

புதிய கல்வித் திட்டம்

மத்திய கல்விக் குழு ஆலோசனை ஒத்திவைப்பு

புதுடெல்லி, நவ 12— ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம் இங்கு நடைபெற்ற மத்திய கல்வி ஆலோசனை போர்டு கூட்டத்தில் ஆலோசனைக்கு வந்ததாகவும், ஆனால் இவ்விஷயம் ஜனவரியில் நடைபெறும் போர்டு கூட்டத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டு விட்டதாகவும் தெரிகிறது.

பாருலேகர் கமிட்டி அறிக்கை இன்னமும் வெளியிடப்படாததை முன்னிட்டு இவ்விஷயம் ஒத்தி வைக்கப்பட்டது.

கமிட்டியின் அறிக்கையும், அதன் விளைவாக, திட்டத்தில் சென்னை சர்க்கார் ஏதாவது மாறுதல் செய்தால் அதையும் அடிப்படையாகக்கொண்டு மத்திய கல்வி ஆலோசனை போர்டு திட்டம்பற்றி ஆலோசிக்கும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கொடுமை! கொடுமை!!

★

தூத்துக்குடி சதி வழக்கில்

96 தோழர்கள்மீது ஆச்சாரியார் அரசாங்கம் சதி வழக்குத் தொடர்ந்துள்ளது. சர்க்கார் தரப்பில் 91 சாட்சிகள் சேகரிக்கப்பட்டுள்ளனர். சதி வழக்கில் 16 சட்டப்பிரிவுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

அந்தச் சட்டப் பிரிவுகள் தரக்கூடிய பயங்கரத் தண்டனைகளின் விபரம் கீழே குறிக்கப்பட்டுள்ளது:—

120 பி. செக்ஷன்:		2 ஆண்டு தண்டனையிலிருந்து தூக்குத் தண்டனைவரை
397	,,	ஏழு ஆண்டு கடுங்காவலுக்குக் குறைவில்லாமல்.
395	,,	ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் வரையுள்ள தண்டனை; அபராதமும் விதிக்கப்படலாம்.
147	,,	2 ஆண்டுத் தண்டனை அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
128	,,	ஆயுள் தண்டனை, அல்லது பத்து ஆண்டுகள் தண்டனை, அபராதத்துடன்.
143	,,	ஆறு மாதத் தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
149	,,	ஆறு மாதத் தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
435	,,	ஏழு ஆண்டுகள் தண்டனை; அபராதமும் விதிக்கப்படலாம்.
126	,,	ஏழு ஆண்டுகள் தண்டனை; அபராதம் விதிக்கப்படலாம்; மேற்கொண்டு சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படலாம்.
336	,,	மூன்று மாதம்வரை தண்டனை அல்லது 2[illegible] ரூபாய்வரை அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
427	,,	இரண்டு ஆண்டுகள், அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
148	,,	மூன்று ஆண்டுகள், அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
307	,,	ஆயுள் தண்டனை, அல்லது 10 வருடம் அபராதத்துடன்.
448	,,	ஒரு வருடம் தண்டனை, அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
454	,,	மூன்று ஆண்டுகள் தண்டனை, அபராதமும் விதிக்கப்படலாம். (இதே பிரிவில் குற்றம் கடுமையானதாக இருந்தால் சிறைத் தண்டனை பத்து ஆண்டுகள் வரை விதிக்கப்படலாம்.)
379	,,	மூன்று ஆண்டுகள் தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.

★

மறந்துவிடாதீர்கள்!

எதிர் வழக்காட

நமது பக்கம் 7 வழக்கறிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்

★

கழகத் தோழர்களை விடுவிக்க, பயங்கரக் குற்றச்சாட்டுகளை உடைத்தெறிய, கழகத்தின் கண்ணியத்தைக் காப்பாற்ற,

நிதி தாருங்கள்!

நீதி காண உதவுங்கள்!!

★

நீங்கள் தரும் உதவியைப் பொறுத்திருக்கிறது, நாம் அடையும் வெற்றியின் அளவு!

★

ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.,
பொருளாளர், தி. மு. க. தலைமை நிலையம், சென்னை

கீழ்க்கண்ட முகவரிக்கு நிதி அனுப்புக:—
அ. பொன்னம்பலனார், "அறிவகம்," இராயபுரம், சென்னை-13

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சென்னை தி. மு. கழகத் தோழர்கள் வழக்கு

குறுக்கு விசாரணையில் போலீசாரின் 'இல்லை, இல்லை' என்ற பல்லவி

சென்னை, நவ. 12— அனுமதியின்றி ஊர்வலம் நடத்தியதாகவும், பொதுக் கூட்டம் கூட்டியதாகவும் தி. மு. கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் பாலசுந்தரம், பொன்மொழி, சென்னை-ஆசைத்தம்பி, ஷண்முகம் ஆகியவர்கள் மீது 4-வது மாநில மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

தங்கசாலை, பெத்துநாய்க்கன் பேட்டை தெருவில் மேற்படி பொதுக்கூட்டம் நடத்தியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப் பெற்றது. இதுபற்றி போலீஸ் கான்ஸ்டபிள் கோர்ட்டில் சாட்சியமளித்தார்.

குற்றச்சாட்டு பற்றி தோழர் பாலசுந்தரம் வாக்குமூலம் தருகையில், "நான் லைசென்சுக்கு எழுதியிருந்தேன்; ஆனால், கொடுக்கவில்லை. ஆனால் நான் பொதுக்கூட்டம் நடத்தவில்லை" என்றார்.

தோழர் பாலசுந்தரம் மேற்படி கான்ஸ்டபிளை குறுக்கு விசாரணை செய்தார்.

பால: நான் பொதுக்கூட்டத்தில் பேசி, நீங்கள் பார்த்தீர்களா?

போலீசு: இல்லை.

பால: நான் ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கினேன் என்பதற்கு ஏதாவது ஆதாரமுண்டா?

போலீ: இல்லை!

மாஜி: ஒன்றுமில்லாது வழக்குத் தொடரக் காரணம்?

போ: லைசென்ஸ் கேட்டு எழுதின கோரிக்கையில் பாலசுந்தரம் கையொப்பமிட்டிருக்கிறார்; அது தான் தெரியும்.

வழக்கு இம்மாதம் 17-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சென்னைத் தோழர்கள் சிறை புகுந்தனர்

சென்னை, நவ. 13— கடந்த 9-ந் தேதி, சென்னை எழும்பூர் கோர்ட்டில், பிரதம மாகாண மாஜிஸ்திரேட் முன் விசாரணைக்கு வந்த ஜார்ஜ் பஜார் கிளைக் கழகத் தோழர்களின் வழக்கில், தோழர்கள் பி. அரங்கசாமி, திராவிடமுத்து, வெண்முகில், பி. கரி[illegible]ன் ஆகியவர்களுக்கு, ரூ. 2[illegible] அபராதமும் தவறினால் ஒரு மாத [illegible]வல் தண்டனையும் விதிக்கப்[illegible]து.

11-ந் தேதி ந[illegible]ற மற்ற தோழர்களின் வ[illegible] தோழர்கள் இளம்பரிதி, பாண்டியன், கே. வெங்[illegible]சன், வடிவேலு, ஜி. முனுசாமி, எம். ஏ. உசேன் ஆகிய ஐவருக்கும் ரூ 20 அபராதமும், தவறினால் ஒரு மாதம் காவல் தண்டனையும் விதித்தார். தோழர்கள் அனைவரும் சிறை புகுந்தனர்.

பொதுக்கூட்டம்

★

30-வது வட்டம் (சிந்தாதிரிபேட்டை) தி. மு. க. சார்பில் நேப்பியர் பார்க்கில் 14-11-53 சனி மாலை 'தூத்துக்குடி நாள்' பொதுக்கூட்டம் நடைபெறும். கூட்டத்திற்கு தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமை வகிப்பார். தோழர்கள் டி. வி. நாராயணசாமி, முகவை ஆர். என். பாண்டியன், வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் பேசுவர்.

பிறப்பு

[illegible]லம் நகர மேற்கு வட்ட கழகச் செயலாளர் தோழ[illegible] மெய்யப்பா அவர்களின் [illegible] வியார் [illegible] அவர்களுக்கு வேலூரில் 5—11[illegible] ஆண் குழந்தை பிறந்தது. சேயும் நலம். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது—இந்த ரூ. இரண்டும் வரப்பெற்றோம்—நன்றியுடையது-பொறுப்பாளர்.

ஆந்திர தனி அரசு

அமைச்சர்களின் சம்பளம் நிர்ணயம்

கர்நூல், நவ. 11— ஆந்திராவில் மந்திரிகளின் மாதச் சம்பளம் ரூ. 1000 என்றும், வீட்டு வாடகை அலவன்ஸ் ரூ. 250 என்றும், மோட்டார் அலவன்ஸ் ரூ 250 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதுபற்றி கவர்னர் திருவேதி விடுத்த அவசரச் சட்டத்தின் கீழ்தான் மேற்கண்ட தொகைகள் நிர்ணயிக்கப்பட்டன. சட்டசபைத் தலைவரும் மந்திரியைப் போலவே சம்பளம் பெறுவார். சட்டசபைத் துணைத் தலைவருக்கு மாதச் சம்பளம் ரூ. 300.

ஆந்திர சபை உறுப்பினர்கள் மாதம் ரூ. 150 சம்பளம் பெறுவர். பிரயாண அலவன்ஸ் நிர்ணயிக்கப்படும்.

பார்லிமெண்டரி செயலாளருக்கு மாதச் சம்பளம் ரூ. 600. இந்த அவசரச் சட்டம் சென்ற மாதம் 1-ம் தேதி அமுலுக்கு வந்ததாகக் கருதப்படும்.

மந்திரிகளின் குடும்பத்தினருக்கு ஆஸ்பத்திரிகளில் இலவச சிகிச்சை அளிக்கப்படும்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ உதவி

இந்தியாவுக்குப் பாதகம் வராமல் பார்த்துக் கொள்ளப்படும்

வாஷிங்டன், நவ 11— பாகிஸ்தானுக்கு, அமெரிக்கா இராணுவ உதவியளிப்பது இன்னும் ஆரம்பப் பேச்சு வார்த்தை கட்டத்திலேயே இருக்கிறது.

இந்தியாவுக்குப் பாதகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள அமெரிக்கா ஆவலாக இருப்பதாகவும், உடனே பாகிஸ்தானில் இராணுவத் தளங்கள் அமைக்க ஒப்பந்தம் ஏற்படாது என்றும் தெரிகிறது. அமெரிக்காவுக்கும் பாரசீகத்திற்குமேற்பட்ட ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த ஒப்பந்தமும் இருக்குமென்று தெரிகிறது.

வெள்ள நிவாரண நிதி

சீன சர்க்கார் உதவி

புதுடெல்லி, நவ. 12— புதுடெல்லியிலுள்ள சைனா ஸ்தானிகர் நேற்று பண்டித நேருவைச் சந்தித்து 2,87,356 ரூபாய்க்கு செக் ஒன்றை நன்கொடையாக அளித்தார். நேருவின் வெள்ள நிவாரண நிதியில் அந்த நிதி சேர்க்கப்படும்.

அடிப்படை சிக்கல் அறிய மேலிடத்தின் தூது!

கூட்டம் கூட்டும் கோரிக்கை மனுவை கொடுப்பதா கூடாதா என்று ஆருடம்!

சென்னை, நவ. 11—
சட்டசபைக் காங்கிரஸ் கட்சியைக் கூட்டுமாறு கோரி, எம். எல். ஏ.க்களிடம் கையெழுத்து வாங்கப்பட்ட மனு பற்றி, இப்போது ஏதும் செய்வதற்கில்லையென்று டாக்டர் வரதராஜுலு நாயுடு கூறினார்.

மனுவில் 80 எம். எல். ஏ.க்கள் கையொப்பமிட்டிருப்பது உண்மைதான் ஆயினும், அதை இப்போது கொடுப்பதா வேண்டாமா என்பதுபற்றி யோசிக்கப்பட்டு வருவதாக டாக்டர் நாயுடு சொன்னார்.

டாக்டர் நாயுடு—ஆச்சாரியார் மோதல் குறித்து 'தினத் தந்தி'யில் செய்திகள் வந்தது பற்றி காமராஜர் வருத்தியதாகவும் டாக்டர் நாயுடு சொன்னார்.

டாக்டர் வரதராஜுலு நாயுடு, லால்பகதூர் சாஸ்திரியையும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி சீனிவாச மல்லய்யாவையும் சந்தித்ததாகத் தெரிகிறது.

காங்கிரஸ் செயலாளர் மல்லய்யா, தமிழ் நாட்டு காங்கிரசில் ஏற்பட்டுள்ள குழப்பத்தை அறிந்து செல்லவே வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

தோழர் மல்லய்யா, பக்தவத்சலம், ஆச்சாரியார், காமராஜர் ஆகியோருடன் தனித் தனியாக உரையாடி யிருக்கிறார்.

காமராஜரின் சொற்படி நம்பிக்கை யில்லாத் தீர்மான மகஜரை கொடுப்பதில் காட்கன் சுணக்குமென சொல்லப்படுகிறது.

ஆண்டு விழாவும், திறப்பு விழாவும்

கணியூர், நவ. 12—
16—11—53-ல், கணியூர் தி. மு. கழக ஆண்டு விழாவும், இளைஞர் அறிவகத் திறப்பு விழாவும் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

விழாக்களில் கலந்து கொள்ள, ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., தோழர் ஜெபக்கனி, மதுரை எஸ். முத்து, தோழர் அலிசேக் மன்சூர் ஆகிய பேச்சாளர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அன்று இரவு சிற்றுளி-சுப்ரமணியம் குழுவினரின் "பகுத்தறிவு கலா நிகழ்ச்சி"யும், ஊர்வலங்களும். கொடியேற்று விழாக்களும் சிறப்பான முறையில் நடைபெற ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மதுரையில் நிதி நாடகம்

மதுரை வழக்கு நிதிக்காக 15—11—53 ஞாயிறு இரவு 10 மணிக்கு தோழர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு, ஜி. சகுந்தலா நடிக்கும் 'இன்பக் கனவு' என் நாடகம் நடைபெறும்.

தூத்துச் [illegible] நிதி [illegible]டம்

.1—53 ஞாயிறு காலை
9 மணிக்கு

இடம்:—கோகலே மண்டபம், சென்னை

தலைவர்: ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

பேச்சாளர்கள்:
சி. பி. சிற்றரசு
குடந்தை எஸ். கே. சாமி

நுழைவுக் கட்டணம்: அணா 8

—தி. மு கழகம், 24-வது வட்டம், சென்னை

ஆண்டவன் தயவில் நடைபெறும் ஆட்சியில்!

மதுரை, நவ 10—
மதுரை மாவட்ட விவசாய டிமான்ஸ்டிரேட்டர் அலுவலகத்தில் இரும்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ரூ. 11.89[illegible] நேற்று முன்தினம் [illegible] திருடி [illegible] விசாரணை [illegible] வகைக் குமாஸ்தா [illegible] வரால் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

அந்தப் புகாரில் நேற்று முன்தினம், ரூ. 11891 ஐ இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டியதாகவும், அப்போது காவல்காரனை திருஞானவேலு என்பவர் தன்னுடன் இருந்ததாகவும், நேற்று காலையில் 8-30 மணிக்கு அலுவலகத்திற்கு வந்ததும் அந்தப் பணத்தைக் கஜானாவில் செலுத்துவதற்காக இரும்புப் பெட்டியைப் பார்த்தபோது உள்ளே இருந்த கதவுகள் திறக்கப் பட்டிருந்தன என்றும், ரூ 11891-ஐ காணவில்லையென்றும் கூறியுள்ளார்.

தெ. ஆ. இந்தியர் நிலை

நியூயார்க், நவ 11—
தென் ஆப்பிரிக்க இந்தியர் பிரச்சினை சம்பந்தமாக விசேஷ அரசியல் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை, ஐ. நா. பொதுச் சபை இன்று ஏற்றுக்கொண்டது.

பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதற்காக இந்தியா—பாகிஸ்தான் தென்னாப்பிரிக்கா சர்க்கார்கள் பேச்சு வார்த்தை நடத்த, உதவி செய்ய சென்ற ஆண்டு நியமிக்கப்பட்ட சமரச கமிஷன் நீடித்துச் செயலாற்ற வேண்டுமென்று இந்த தீர்மானம் கூறுகிறது. சிரியா, யூகோஸ்லேவியா ஆகியவை கமிஷன் உறுப்பினர்கள். இக்கமிஷனுடன் தென்னாப்பிரிக்க சர்க்கார் தொடர்பு ஏற்படுத்தி கொள்ள வேண்டுமெனவும் தீர்மானம் கூறுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

15—11—53 ஞாயிறு மாலை
5-30 மணிக்கு

இடம்: எழும்பூர், திவான்பகதூர் ரங்காச்சாரி தெரு
(சாமி செட்டி தெரு அருகில்)

தலைவர்: கோ. இளவரசு

பேச்சாளர்கள்:
நாஞ்சில் கி. மனோகரன்
டி வி. நாராயணசாமி
டி என் இராவணன்
இளஞ்சேரலாதன்

★

கரூர்

15—11—53 ஞாயிறு மாலை

பேசுவோர்:
தோழியர் பூங்கோதை
வி. சிவப்பிரகாசம்

★

காங்கேயநெல்லூர்

15—11—53 ஞாயிறு மாலை

பேசுவோர்:
புலவர் மணி[illegible]ன்
கேஞ்சோழ[illegible]

★

பி கம்பி

15—1[illegible]-53 ஞாயிறு மாலை

பேசுவோர்:
எ[illegible] எஸ். மணி
[illegible]. கேமோறன்

★

உசிலம்பட்டி

15—11—53 மாலை 4 மணிக்கு

இடம்: சந்தைப்பேட்டை மைதானம்

தலைவர்: பி. எஸ். மாணிக்கம்

பேசுவோர்:
எஸ். எஸ். ராஜேந்திரன்
எம். எஸ். பால்ராசு
பி. எஸ். தமிழன்
அ. உசிலைத்தம்பி

அந்தோ பரிதாபம்!

ரீவா, நவ. 11—
விந்தியப் பிரதேசத்தில் தேர்தல் ட்ரிபூனலில் தீர்ப்பின்படி 2 மந்திரிகளும், 7 எம் எல். ஏ.-க்களும் பதவி இழந்தனர்.

அஸ்ஸாம் கவர்னர் போல அதிகாரம் இல்லாததற்கு வருத்தம்

வெறும் பொம்மையாக இருப்பதில் வெறுப்பு

நாகபுரி, நவ 10—
"தற்போது கவர்னர்களைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. முன்பெல்லாம் கவர்னர்கள் இவ்வாறு அலைக்கழிக்கப்படவில்லை. 'ஆமாம், இல்லை' என்று பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் கவர்னர்கள் அதிகாரத்தோடு கூறி வந்தனர். இப்போதைய அரசியல் அமைப்பில் கவர்னர்கள் என்ன செய்ய முடியும்?"

"அஸ்ஸாம் மாகாண கவர்னர்தான் தொல்லை இல்லாதவர். வயதான அல்லது இளமை வாய்ந்த எந்த முதன் மந்திரியினுடைய தொல்லையும் அவருக்கு இல்லை,"

—இவ்வாறு சென்னை கவர்னர் பிரகாசா இங்கு ஒரு கூட்டத்தில் கூறினார்.

கவர்னர் பிரகாசா உணருகிறார்!

"இந்தியைப் புகுத்தும் முயற்சி அனைத்திற்கும், தென்னிந்தியாவில் பலத்த எதிர்ப்பு இருக்கிறது; வட இந்தியர்கள், மேலும் மேலும் இந்தி மொழியைத் திணிப்பதற்கு கட்டாய முறையை மேற்கொண்டால், தென்னிந்தியாவில், இந்தி மொழி முன்னேற்றம் காண முடியாது."

"அன்பு வழியால்தான், இந்தி மொழியைத் தேசிய மொழியாக்குவதில் வெற்றி பெற முடியுமேயல்லாது, நிர்ப்பந்த முறையினால், முடியவே முடியாது."

—இவ்வாறு, சென்னை கவர்னர் பிரகாசா, நாகபுரியில், 5-வது அகில இந்திய ராஷ்டிரபாஷா பிரசார சம்மேளனத்தைத் திறந்துவைக்கையில் குறிப்பிட்டார்.

'சம்மனை' நிராகரித்தார் ட்ரூமன்!

பொதுவுடமைக்காரருக்கு வேலை கொடுத்தாராம்!

வாஷிங்டன், நவ. 13—
வேவு வேலை பார்த்ததாக ஒரு முன்னாள் அதிகாரி மீதுள்ள புகாரில் சாட்சியம் கூற வருமாறு அமெரிக்க சட்டசபைக் கமிட்டி அனுப்பிய சம்மனை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் நிராகரித்தார். கமிட்டியினை சம்மனை தான் பொருட்படுத்தப் போவதில்லை என்றார்.

ட்ருமனை விசாரிப்பதை கால வரையறை இன்றி ஒத்திவைத்திருப்பதாகக் கமிட்டி தலைவர் அதற்குமுன் அறிவித்தார். ட்ருமனை கமிட்டி இன்று விசாரிப்பதாக இருந்தது.

சுப்ரீம கோர்ட் நீதிபதி டாம் கிளார்க்குக்கும் சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. அவரை விசாரிப்பதும் ஒத்திவைக்கப்பட்டதென கமிட்டித் தலைவர் குறிப்பிட்டார்.

• • •

ஐசன்ஹோவர் கண்டனம்

'டெக்ஸ்டர் வைட் வழக்கில்' சாட்சியம் கூறுமாறு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமனுக்கு சட்ட சபைக் கமிட்டி சம்மன் அனுப்பியிருப்பதை, யு. எஸ். ஜனாதிபதி ஐசன்ஹோவர் வன்மையாகக் கண்டித்தார். ட்ருமன் போன்ற பெரிய மனிதர்கள அமெரிக்காவுக்கு மனமறிந்து தீங்கு செய்யமாட்டார்கள் என்றார்.

* * *

முன்னர் வந்த செய்தி

நியூயார்க், நவ. 11—
அமெரிக்க சட்ட சபைக் கமிட்டி முன்னிலையில் சாட்சியளிக்கும்படி முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமனுக்கு வாரண்ட் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கு ஒற்றன் வேலை பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பெற்ற காலஞ் சென்ற ஒயிட் என்பவருக்கு ட்ருமன் உதவி மந்திரி பதவி கொடுத்தார். ரஷ்ய உளவாளியாக ஒயிட் இருக்கிறார் என்று தெரிந்தும் அவரை மந்திரியாக்கியதற்கான காரணத்தைக் காட்டும்படி ட்ருமனுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவிற்குத் துரோகம் செய்பவர்களைப் பற்றி விசாரிக்க அமெரிக்க சட்ட சபைக் கமிட்டி ஒன்று இருக்கிறது. அந்தக் கமிட்டியிடம் அடுத்த வெள்ளிக்கிழமை யன்று சாட்சியளிக்கும்படி ட்ருமனுக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ட்ருமன் வாரண்ட்டை நேற்று பெற்றுக் கொண்டார்.

ட்ருமன் காலத்தில் வெளி நாட்டிலாகா மந்திரியாகவிருந்த பயர்னஸ் என்பாருக்கும் இது போல ஒரு வாரண்ட் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

ட்ருமன் பேசுகையில் பொதுவுடைமையர் விஷயத்தில் நான் மிருதுவாக நடந்துகொண்டதாகக் கூறப்படுவது பொய்; ஆனால் தனிப்பட்டோரின் உரிமைகளுக்கு நான் உலை வைத்ததில்லை என்பது உண்மை" என்றார்.

கோவை உண்ணாநோன்பு முடிவு

அரசாங்க அதிகாரிகள் தலையீடு

கோவை, நவ. 13—
கடந்த 1951-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் கோவை சிட்டி டிரான்ஸ்போர்ட் நிர்வாகம், தங்களுக்கு நல்லதெனத் தோன்றிய கோவை மாவட்ட மோட்டார் தொழிலாளர் சங்கத்தில் அங்கத்தினர்களான ஒரே காரணத்தால், 61 தொழிலாளர்கள், எந்தவித முன்னறிவிப்பின்றியும் வேலையினின்று நீக்கப்பட்டனர்.

வேலை இழந்த தொழிலாளர்கள் நீதிமன்றத்தில் தங்கள் குறைகளை எடுத்துக்கூறிய வகையில், மூன்று கோர்ட்டுகளும் தொழிலாளர்களுக்குச் சாதகமாக நீதி வழங்கியும், தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் மேற்பார்வையிலுள்ள சிட்டி டிரான்ஸ்போர்ட் நிர்வாகம் தொழிலாளர் குறைகளைக் கவனிக்காததால், அதை எதிர்த்து, நீதி வேண்டி, கடந்த முதல் தேதியிலிருந்து தோழர் மருதாசலம் அவர்களும், 6-ம் தேதியிலிருந்து தோழர் ஜோனதன் அவர்களும் உண்ணா நோன்பை மேற்கொண்டனர்.

நவ. 10 மாலை 6-15 மணிக்கு, ஜில்லா கலெக்டர் தோழர் என். எஸ். மணி ஸ்தலத்திற்கு வந்து உறுதி மொழி அளித்ததின் பேரில், தோழர்கள் தங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

இருவரும் அதிகபலவீனமான நிலையில் இருப்பதால் கலெக்டரின் விசேஷ ஏற்பாட்டின் பேரில் ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

தொழில் கோர்ட் தீர்ப்பை அமுல் நடத்துவதற்கான நடவடிக்கையை சர்க்கார் ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாகவும், அதை துரிதப்படுத்த, தான் ஆவன செய்வதாகவும் உறுதி கூறி இருவரும் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று கலெக்டர் கேட்டுக்கொண்டார்.

அதன் பேரில் உண்ணாவிரதம் முடிவுபெற்றது. உண்ணாவிரதமிருந்த இருவரும் காரில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பிரச்னைக்கு விரைவில் தீர்வு காண்பதற்காகத் தாம் இவ்வாரம் பிரஸ்தாப மோட்டார் ஸ்தாபனத்தின் ஆலோசகர் தோழர் ஜி. டி. நாயுடு, மோட்டார் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் ஆகிய இருதரப்பினரையும் கூட்டிப் பேச ஏற்பாடு செய்திருப்பதாகவும், ஜில்லா கலெக்டர் உண்ணாவிரதமிருந்த சங்கக்காரிய தரிசியிடம் கூறினார்.

பொன்மலை—

மேலக்கற்கண்டார்கோட்டை
தி. மு. கழக
3-வது ஆண்டு விழா
14—11—53 சனி மாலை

இடம்: மே. க. கோட்டை கழக மைதானம்

பேசுவோர்:
தோழியர் அருண்மொழி
சிற்றுளி ஏ. சுப்ரமணியம்
எஸ். நேமோறன்

சின்ன காஞ்சிபுரம்

அறிவு வளர்ச்சிக் கழகம்
இரண்டாம் ஆண்டு விழா
15—11—'53 ஞாயிறு மாலை
6 மணிக்கு

இடம்: மலையாளத் தெரு
(சின்ன காஞ்சிபுரம் போலீஸ் ஸ்டேஷன் அருகில்)

தலைவர்: பி. கச்சபாலையம்

பேசுவோர்:
வி. சம்மந்தன்
கே. டி. எஸ். மணி
காஞ்சி-கல்யாணசுந்தரம்
என். எஸ். இளங்கோ

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ஆதிநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.